# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தமிழ் மொழியும் இலக்கியமும் - I** தரம் : 10
දෙමළ භාෂාව - I நேரம்: 1 மணித்தியாலம்

- ♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ♦ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத்தெரிவு செய்து புள்ளடி இடுக.**

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1) ‘பங்கப் **பழனத்**து உழவர் ….” பழனம் என்பதன் பொருள்,
   1) கலப்பை 2) களனி 3) வயல் 4) சேறு

2) ‘கால் கொண்டு வண் கவிதை மொழியும்” இங்கு வண் என்பதன் ஒத்த சொல்,
   1) அவலட்சணம் 2) அழகு 3) திண்மை 4) அடிமை

3) ‘சிறு மீன் சினையினும் **நுண்ணி**யதே ஆயினும்..” நுண்மை என்பதன் எதிர்ச் சொல்,
   1) பருமை 2) மிகச்சிறியது 3) அணுவளவு 4) வானளவு

4) ‘**மூத்தோர்** இல்லாத அவைக் களனும்” என்பதில் மூத்தோர் என்பதன் எதிர்ப்பதம்,
   1) வயோதிபர் 2) இளைஞர் 3) இளையோர் 4) விருத்தாப்பியர்

5) **பாணன்** பாடிப் பரிசு பெற்று வந்தான். பாணன் என்பதன் பெண்பாற் சொல்,
   1) பாலகி 2) பாடகி 3) பாடினி 4) பாங்கி

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

6) அரண்மனையில் பிற ஆடவரை அனுமதிக்காது அரச குலப்பெண்கள் வசிப்பதற்கெனவுள்ள தனிப்பகுதி,
   1) மாடம் 2) சாளரம் 3) உப்பரிகை 4) அந்தப்புரம்

7) மாவின் இளம் பிஞ்சு வடு. பனையின் இளங்காய்
   1) குரும்பை 2) வடலி 3) நுங்கு 4) கச்சல்

8) இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இவ்வருடம் அதன் வைரவிழாவைக் கொண்டாடியது. வைரவிழா என்பது,
   1) 50ம் ஆண்டு நிறைவு விழா 2) 60ம் ஆண்டு நிறைவு விழா
   3) 25ம் ஆண்டு நிறைவு விழா 4) 75ம் ஆண்டு நிறைவு விழா

9) சிங்கம், வண்டு, திருமால் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்,
   1) அரி 2) கரி 3) அளி 4) ஆளி

10) மகிழ்ச்சி, உவகை, உவப்பு என்ற சொற்கள் தரும் பொருள்,
   1) கழிப்பு 2) வனப்பு 3) முறுவல் 4) களிப்பு

11) இளமைப் பருவத்தைக் குறிக்க மிகப் பொருத்தமான அருஞ்சொற்கள்,
   1) உணர்வுவொழிகாலம் 2) குறுகுறு நடந்து குதலை மொழியும் காலம்
   3) துள்ளித்திரிகின்ற காலம் 4) நரை திரை மூப்புறு காலம்

12) தங்கம்மா தனது மகள் அலுவலகமொன்றில் கிளார்க் (Clerk) ஆக வேண்டுமெனக் கனவு கண்டாள். கிளார்க் என்ற சொல்லின் தமிழ்ச் சொல்,
1) முகாமையாளன் 2) எழுத்தாளன் 3) ஊழியன் 4) எழுதுவினைஞன்

13) ஆடுகளின் கூட்டம் மந்தை மயிலின் கூட்டம்,
1) குழாம் 2) அணி 3) கலாபம் 4) குவியல்

14) நிறுத்தற்குறிகளில் அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி எனப்படுவது,
1) , 2) ; 3) : 4) !

15) கையும் மெய்யுமாக பிடிபட்ட திருடன் பொலிசாரிடம் ஏதோ உளறினான். உளறுதல் என்பதன் கருத்து,
1) பொருளின்றி பிதற்றுதல் 2) விளக்கமாகச் சொல்லுதல்
3) இரந்து பேசுதல் 4) கடிந்து சொல்லுதல்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) ஆறுமுகநாவலர் இலக்கண நூல்கள் பலவற்றை துறைபோகக் கற்றார். இங்கு துறைபோதல் என்ற மரபுத் தொடர்தரும் கருத்து,
1) ஐயந்திரி பறக்கற்றல் 2) பிறநாட்டில் கற்றல்
3) மேலோட்டமாக கற்றல் 4) குருவிடம் கற்றல்

17) ‘உம்மோடு வெட்டிப்பேச்சு பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை” வெட்டிப்பேச்சு என்ற மரபுத்தொடரின் பொருள்,
1) விவாதம் செய்தல் 2) மறுத்துப் போதல் 3) நீண்ட பேச்சு 4) வீண் பேச்சு

18) தூய்மையானவரிடத்து சுலபமான எண்ணமிருக்காது என்ற கருத்தை தரும் பழமொழி
1) மனமுண்டால் இடமுண்டு 2) வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை
3) நிறைகுடம் தளும்பாது 4) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

19) மகனை இழந்த தாய் மனம் உருகுவதற்கு பொருத்தமான உவமைத் தொடர்,
1) அகலாது அணுகாது தீக்காய்வர் போல 2) ஏறாமடைக்கு நீர் பாய்ச்சினாற் போல
3) வலையிற் சிக்கிய மான் போல 4) அக்கினியிற்பட்ட மெழுகு போல

20) ‘ஆறின கஞ்சி பழங் கஞ்சி” என்ற பழமொழி தரும் உட்கருத்து?
1) கஞ்சி ஆறிவிட்டால் பழையதாகி விடும்
2) ஆறிப் பழையதான கஞ்சியை யாரும் விரும்பார்
3) எக்காரியத்தையும் பிற்போடக் கூடாது
4) கிடைத்த சந்தர்ப்பம் மீண்டும் வராது

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) புளியங்காய் என்பதில் இடம்பெற்றுள்ள அம் என்பது,
1) சந்தி 2) சாரியை 3) விகுதி 4) விகாரம்

22) என்னுடைய ஆசிரியர் வந்தார். இங்கு என்னுடைய என்பது,
1) இரண்டாம் வேற்றுமை 2) மூன்றாம் வேற்றுமை
3) ஐந்தாம் வேற்றுமை 4) ஆறாம் வேற்றுமை

23) பின்வருவனவற்றுள் பெயரும் பெயரும் சேர்ந்த கூட்டுப் பெயருக்கு உதாரணம்
1) கண்காட்சி 2) எறிகணை 3) எழுதுகோல் 4) புத்திசாலி

24) அறிவாளி என்ற ஆக்கப் பெயரின் விகுதி,
1) வாளி 2) ளி 3) அறவு 4) ஆளி

25) பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்,
1) நாளை வா 2) காற்று வீசியது 3) வந்தான் சீசர் 4)அவன் வந்தானா?

26) மரவேர் என்பது
1) தோன்றல் விகாரம் 2) திரிதல் விகாரம்
3) கெடுதல் விகாரம் 4) இயல்புப் புணர்ச்சி

27) ‘க” என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்,
1) மகள் 2) சிங்கம் 3) சோகம் 4) அகம்

28) ‘உறுபசி தீர்ப்பாய் என்று நினைத்து வந்தேன்” என்ற வாக்கியத்தில் வந்த சொற்கள்,
1) பெயர், வினை, இடை, உரி 2) பெயர், வினை, உரி
3) பெயர், வினை, இடை 4) பெரும், வினையும்

29) பின்வரும் வாக்கியங்களுள் வேறுபட்ட கருத்தினைத் தரும் வாக்கியம் எது?
1) நீ அல்லது நான் இதனைச் செய்ய வேண்டும்
2) நீயாவதுநானாவது இதனைச் செய்ய வேண்டும்
3) நீயும் நானும் இதனைச் செய்ய வேண்:டும்
4) நீயேனும் நானேனும் இதனைச் செய்ய வேண்டும்

30) மலர் கொய்வோனைக் கண்டேன் - கொய்வோனை என்பது,
1) மொழிற் பெயர் 2) சினைப்பெயர்
3) வனைமுற்று 4) வினையாலணையும் பெயர்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) வாழ்வுக்கு இனிமை தருவது அன்பு. இயங்குகின்ற இயந்திரத்திற்கு எண்ணெய் போட்டால் அது தடங்கல் இன்றி இயங்குகின்றது. அந்த எண்ணெய்க்கு நிகரானது அன்பு அன்புடையவர்களே எங்கு சென்றாலும் வாழ்வை நன்கு செலுத்துபவர் ஆகின்றனர்.
1) அன்பின் இனிமையை பலர் அறிவதில்லை
2) இயந்திரமொன்றை இயங்க வைப்பது எண்ணெய் ஆகும்.
3) இயந்திரத்திற்கு இடப்படும் எண்ணெய் போன்றது அன்பு
4) அன்புடையவர்களே வாழ்க்கையை நன்கு நடத்துபவர் ஆவர்

32) கற்றற்குரிய நூல்களைநல்லாசிரயரிடத்துச் சென்ற கற்க வேண்டும். வறிஞன் ஒருவன் பொருள் பெற வேண்டி எவ்வாறு செல்வனிடம் சென்று தலை வணங்கித் தாழ்ந்து நிற்பானோ அது போல தாமும் ஆசிரியர் முன் அன்புடன் தலை வணங்கி வழிபட்டுக் கற்றல் வேண்டும்.
1) நூல்களை நல்லாசிரியரிடத்துச் சென்று கற்க வேண்டும்
2) ஏழை, பணக்காரனிடம் சென்ற பணிவுடன் இரத்தல் வேண்டும்
3) ஆசிரியரிடம் சென்று கற்றதன் படி ஒழுகுதல் மாணவனது கடமையாகும்.
4) கற்க வேண்டிய நூல்களை நல்லாசிரியரிடம் சென்று பணிவுடன் கற்க வேண்டும்.

- **பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க.**

33) வெள்ளம் போல மக்கள் கூட்டம்
1) திரண்டனர் 2) திரண்டது 3) திரண்டன 4) திரண்டார்

34) வருடாந்த பொதுக்கூட்டத்தில் மன்றச் செயலாளரினால்,
1) அறிக்கை சமர்ப்பித்தார் 2) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது
3) அறிக்கை சமர்ப்பித்தது 4) அறிக்கையைச் சமர்ப்பித்தார்

35) “உமது புத்தகம் எங்கே?” என்று ஆசிரியர் கேட்டபோது மாணவன்,
1) “தான் அதைத் தொலைத்து விட்டேன்” என்றான்.
2) தான் அதைத் தொலைத்து விட்டேன் என்றான்.
3) “நான் அதைத் தொலைத்து விட்டேன்” என்றான்.
4) நான் அதைத் தொலைத்து விட்டேன் என்றான்.

36) பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல் வரிசையைத் தெரிவு செய்க
.1) நிலயம், இணக்கம், நிச்சயம், மார்க்கம் 2) உயர்ச்சி, வீழ்ச்சி, பெயர்ச்சி, எழுச்சி
3)எடுகோள், கருதுகோள், கடல்கோள், மேற்கோள் 4) கடைமை, மடைமை, இனிமை, எளிமை

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் சென்றவர்களால் இலங்கை அரசுக்கு அந்நிய …………………. அதிகம் கிடைப்பதாக அறிக்கை குறிப்பிடுகின்றன.
1) நன்கொடை 2) மானியம் 3) மூலதனம் 4) செலாவணி

38) பாடசாலையில் ேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பழைய ாணவர் ………….. நல்குவது இன்றியமையாததாகும்.
1) கூட்டுறவு 2) ஒத்துழைப்பு 3) ஒத்திவைப்பு 4) மிகைச்செலவு

39) நிதியாண்டிலே தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதெனக் காரணங்காட்டி ஆண்டின் நடுப்பகுதியில் …………….. பிரேரணையை அமைச்சார் சமர்ப்பித்தார்.
1) குறைநிரப்பு 2) மிகையூதிய 3) துண்டுவிழும் 4) மிகைச் செலவு

40) கீழே சல வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுப்கோப்பான பந்தியொன்று அடையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) தலைச் சங்கத்தின் அழிவோடு அரசரும் புலவரும் வாழாதிருந்து விடவில்லை.
ஆ) கடல் கோளுக்குப் பின் கபாடபுரத்தில் இடைச்சங்கம் தொடர்ந்தது.
இ) இடைச்சங்கத்தின் காலம் மூவாயிரத்தெழுநூறாண்டாகும்.
ஈ) தலைச்சங்கம் கடல்கோளினால் அழிந்தது.
உ) இடைச்சங்கம் தலைச்சங்கத்தின் மாதிரியாகவே அமைக்கப்பட்டது.
1) அ,இ,ஆ,ஈ,உ 2) ஆ,இ,உ,ஈ,அ
3) ஈ,அ,ஆ,உ,இ 4) உ,ஈ,இ,அ,ஈ

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தமிழ் மொழியும் இலக்கியமும் - II** தரம் : 10
දෙමළ භාෂාව - II
நேரம்: 2 மணித்தியாலம்

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

1. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.
   1) தயிர்க் கடலில் வெண்ணெய்ப் போல வெண்ணிலாவே
      தனி விசும்பிற் றவழ்ந்தி டுவாய் வெண்ணிலாவே
      இதனை சந்திபிரித்தெழுதுக.
   2) தன்வினை, பிறவினை என்பவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
   3) வானிலை சீரில்லை என்ற அச்சம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.
      இவ்வாக்கியத்திலுள்ள தலைமைத்தொடர், சார்புத்தொடர் என்பவற்றை எழுதுக.
   4) பின்வரும் வாக்கியங்களிலுள்ள வழுவமைதி என்ன பொருளில் வந்துள்ளது?
      1. முயலார் பாடினார் 2. இவன் ஒரு கழுதை
   5) உறவு முறைக் கடிதம் எழுதப்படும் நோக்கங்களில் எவையேனும் இரண்டினைத் தருக.
   6) நேர்முக வர்ணனையாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் 2 தருக.
   7) பின்வரும்வாக்கியங்களில் “கு” உருபு என்ன பொருளில் வந்துள்ளது.
      1. கண்ணனுக்கு ஆங்கிலம் பேச முடியும்
      2. எத்தனை நாட்களுக்கு இங்கு இருப்பீர்கள்
   8) “உம்மும்மா குளிக்கியல்லியா?கொல்லேல சுடு தண்ணீ வெச்சீக்கி” இதனை எழுத்து வழக்கிற்கு மாற்றியமைக்க.
   9) வியங்கோள் வினையின் வாழ்த்துதல், வேண்டுதல் ஆகிய பொருள்களுக்கு ஒவ்வோர் உதாரணம் எழுதுக.
   10) பகுபத உறுப்புக்கள் எத்தனை? அவை எவை?

(20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.
   அ) எம்மில் சிலர் ஒருமுறை தோல்வியைக் கண்டதுமே துவண்டிடுவர். ஆனால் உலகில் பல விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும், விளையாட்டு வீரர்களும் முதலில் தோல்வி கண்ட போதிலும், தமது அயராத முயற்சியினால் வெற்றி பெற்று சாதனைப் படைத்துள்ளமை நாமறிந்ததே. எனவே முயற்சி வெற்றியளிக்கும் எனும் கருத்தை புலப்படுத்தும் வகையில் விளக்கக் கட்டுரையொன்று எழுதுக.
   ஆ) மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்வது ஒழுக்கமும், கல்வியுமாகும். ஒருவன் எவ்வளவு கற்றிருப்பினும் ஒழுக்கம் தவறுவானாயின் எவராலும் மதிக்கப்படமாட்டான். எனவே ஒருவனை கற்றவனெனக் காட்டுவது ஒழுக்கமாகும் எனும் தொனிப்பொருளில் மேடைப் பேச்சு ஒன்றை எழுதுக.

இ) "இன்று இணையம் எமக்குத் தரும் பல விடயங்களை முன்பு நூல்களே தந்துதவின. இந்த இணையத்தள வசதிகளால் பரவாலாக வாசிப்புத்திறன் குறைந்துபோயுள்ளது. இணையத்தின் மூலம் வாசிப்பை மேம்படுத்தலாம். எனக் கூறும் ஒருவருக்கும், அதனை மறுத்து நூல்களை வாசிப்பதன் மூலமே வாசிப்பை மேம்படுத்தலாம் எனக் கூறும் மற்றொருவருக்கும் இடையிலான உரையாடல்.

ஈ) வேலையிலிருந்து வீடு திரும்பிய சாந்தன் களைப்பையும் பொருட்படுத்தாது தனது தாய் கற்பகத்தின் அறையை நோக்கி நகர்கிறான். கட்டிலிலேயே தனது வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருக்கும் தாய் கற்பகத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறான். இதுவே அவனது அன்றாடச் செயற்பாடாக இருந்து வருகிறது.....
தொர்ந்து கற்பனைச் சிறுகதை ஒன்று.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 4-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கை வாழத் தொடங்கிய காலம் முதல் கண்டுவந்துள்ள பெருங்கனவுகளில் ஒன்று ஒரே உலகம் உருவாதல் வேண்டும் என்பதாகும். உலகியல் அடிப்படையில் மட்டுமன்றி ஆன்மீக அடிப்படையிலும் பேதங்கள் அற்ற ஒருமையை சமய தத்துவங்கள் இலட்சியமாகக் குறிப்பிட்டு வந்து சமுதாய வரலாற்றை எடுத்து நோக்கினால் பெரியதொரு முரண்பாடு இருந்து வந்திருப்பது. புலனாகும் ஒரு புறம் சகலவிதமான எல்லைகளையும் வரம்புகளையும் வேறுபாடுகளையும் கடந்து பொதுமையை மனிதன் விழைந்து வந்திருக்கிறான். மறுபுறம் குலம், சாதி, ஊர், நாடு, மொழி, இனம், நிறம் முதலிய எத்தனையோ உணர்வுகள் அவனைப் பாதித்து வருவதைக் காண்கிறோம். அப்பேதத்தை அவாவும் மனிதன் தான் பேதப்பட்டும் கிடக்கிறான். இது மனுகுலம் அனுபவித்து எதிர்நோக்கும் மாபெரும் முரண்பாடு. நயத்தகு நாகரிகம் கண்ட சமுதாயங்களில் எல்லாம் தத்தம் எல்லைகளைக் கடந்து உலகெலாம் தழுவும் உயர்ந்த குறிக்கோள் காலந்தோறும் எழுந்திருக்கக் காணுகிறோம்.

(10 புள்ளி)

4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் இலக்கியத்தில் சங்ககால இலக்கியங்கள் பண்டைக்காலத் தமிழர்களின் வாழக்கையை நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பண்டைத் தமிழர் வாழ்க்கையை எல்லாக் கோணங்களிலிருந்தும் கண்டறியும் வாய்ப்பை சங்க இலக்கியங்கள் தமக்களிக்கின்றன. அதிவிஸ்தாரமான தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் அறநெறிகளில் கொண்டிருந்த அற்புதமான பற்றுதலுக்கு சங்க இலக்கியங்கள் விளக்கமளிக்கின்றன. இவ்விலக்கியங்களைப் படிப்பதே அதிரிஷ்டம் தான். இவ்வாறாக சங்ககாலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையுள்ள காலககட்டங்களின் மனித வாழ்க்கையை இலக்கியங்கள் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

1) சங்க இலக்கியங்களின் பண்பு யாது?
2) சங்க இலக்கியங்கள் எவற்றிற்கு விளக்கமளிக்கின்றன?
3) சங்ககாலம் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டு வரையான காலங்களுள் எவையேனும் நான்கு காலங்களைக் குறிப்பிடுக.

4) ‘‘மனித வாழ்க்கையை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன.’’ சிறு விளக்கம் தருக.

5) கீழுள்ள சொற்களின் பொருளை எழுதுக.

- நுணுக்கம்
- சமூகம்
- பற்றுதல்
- பிரதிபலித்தல்

(10 புள்ளிகள்)

5. அ) உங்களது ஊரிலுள்ள விளையாட்டுக்கழகம் ஒன்று அதன் இருபத்தைந்தாவது வருடப் பூர்த்தியைக் கொண்டாடவுள்ளமையை முன்னிட்டு விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது. விளையாட்டுக் கழகத்தின் செயலாளராக உம்மைக் கருத்தில் கொண்டு உங்கள் மன்றக் குழுவினருக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையொன்றை எழுதுக. (100 சொற்களில்)

ஆ) உமது ஊரில் நீண்டகாலமாக திருத்தப்படாதிருந்த வீதிகள் சில மிகக்குறுகிய காலத்தில் திருத்தியமைக்கப்பட்ட விடயமானது, வியப்பிற்குரியதும், பெருமைக்குரிய விடயமுமாக கருதப்படுகிறது. எனவே இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு வீதிப்போக்குவரத்து அதிகாரச் சபைத் தலைவருக்கு நன்றி கூறும் வகையில் 100 சொற்களில் ஒரு கடிதம் வரைக.

(15 புள்ளி)

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**தமிழ் மொழியும் இலக்கியமும் - III**

දෙමළ භාෂාව - III

நேரம்: 2 மணித்தியாலம்

- **அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்**

1. சுருக்கமான விடை எழுதுக.

1) தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்
அ) மண்டுகம் என்பது யாது?
ஆ) இப்பாடலடி இடம் பெற்ற இலக்கியம் எது?

2) "ஆடிக்குடத்தடையும் ஆடும் போதே இரையும்........" எனத் தொடங்கும் பாடலில்
அ) சிலேடையாகக் குறிப்பிடப்படும் இரண்டும் எவை?
ஆ) பிண்ணாக்கு என்பதை இரு பொருள்பட எழுதுக?

3) "விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு
போதம் மூன்றும் நலம் செய்யும் நாடு"
அ) விசேஷம் மூன்றும் எவை?
ஆ) போதம் மூன்றும் எவை?

4) சிறுவனா? இளைஞனா? அல்லது முழு மனிதனா?
அ) இக் கூற்று யாரால், யாருக்கு சுறப்பட்டது?

5) அ) நாலடியாருக்கு உரை எழுதியவர் யார்?
ஆ) இதன் மூன்று இயல்களையும் குறிப்பிடுக?

6) பொழிந்த நெய்யாகுதி வாய் வழி பொங்கி எழுந்த கொழுங்கன வென்ன எழுந்தார்
அ) இப்பாடலடி இடம் பெற்ற இலக்கியம் எது?
ஆ) "கொழுங்க வென்ன........." எழுந்தவர் யார்?

7. "புலங்களோடு கரணமும் ஆவியும்......."
அ)ஐம்புலங்களும் எவை?
ஆ) அந்தக் காரணங்களும் எவை?

8) 'கிம்புரியின் கொம் பொடித்து வெம்புதினை இடிப்போம்.' என்பதில்
அ) கிம்புரி என்பது யாது?
ஆ) வெம்புதினை என்பது யாது?

9) “விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர், வெகுளி வொங்கிப் பகைவரை நிந்திப்பர்.....”
   அ) இப்பாடற் தொடர் யாரால் பாடப்பட்டது?
   ஆ) இங்கு வெகுளி என்ற சொல்லின் பொருள் யாது?

10. “ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஓக்கவிற்கும்
   கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
   அ) இப்பாடலைப் பாடிய புலவர் யார்?
   ஆ) ‘கார்’ ன்பதன் பொருள்

2. 1) கழியும் பிழை பொருட்டள்ளி நன்னூலாங் கடலிலுண்டு வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை மொழியும் பலர் மனத்தேயிடித்து முழங்கி மின்னிப் பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.
   அ) காளமேகப் புலவரின் கவியாற்றல் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது.
   ஆ) நன்னூலாங்கடல் இது எவ்வகை அணி?

2) வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
   மந்தி சிந்துகனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
   கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
   ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
   தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்
   செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
   கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
   குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

   அ) இப்பாடலில் காணப்படும் பொருளணி எது?
   ஆ) திரிகூட மலையில் நடைபெறுவதாகக் கூறப்படும் செயல்களுள் இரண்டை எழுதுக.

3) கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
   மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனினே
   எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
   எத்துணையும் ஆற்றல் இனிது
   அ) இப்பாடல் எந்த இலக்கியத்தில் யாரால் பாடப்பட்டது?
   ஆ) இப்பாடலில் கூறப்படும் இனிய செயல்கள் மூன்று தருக.

4) நாவலர் அவர்கள் அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றியைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்த படி இருக்கிறார்கள்.
   அ) நாவலர் இருந்த நிலை பற்றிக் கூறுக.
   ஆ) நாவலர் அவ்வாறு இருந்ததற்குக் காரணம் யாது?

5) அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்குப் பாத்திகட்டுவது போல கணிப்பொறி தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும் இன்னொரு பகுதியில் மனைவியும் மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புக்களை இந்த வரம்புக்குள் வைத்துக் கொண்டோம். இதற்குப் பிறகு ஒரு ஒழுங்கு முறை வந்தது. ஆரம்பத்தில் எனக்கு கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் இணக்கம்

ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தையெல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது என்னுடைய வேலையை வெகு சுலபமாக்கியது.

அ) குடும்பபத்தினரின் கம்பியூட்டர் தொடர்பான பிணக்கம் எவ்வாறு இணக்கமாக மாற்றமடைந்தது?

ஆ) அது தன்னிடமுள்ள சூட்சுமங்களை எல்லாம் மெல்ல அவிழ்த்து விட்டது. என்பது மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

3. திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் பாடப்பகுதியில்,
   அ) குற்றால மலையின் சிறப்பு (9 புள்ளி)
   ஆ) குறவர்களின் செயற்பாடுகள் என்பவற்றை விபரிக்குக. (6 புள்ளி)

அல்லது

தனிப்பாடல் எனும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு
அ) "பங்கப் பழனத்துழு முழவர்....." எனும் பாடலில் நாட்டின் சிறப்பு. (5 புள்ளி)
ஆ) "ஓர் தட்டிலே பொன்னும் .........." என்பதில் பஞ்ச காலத்தின் கொடுமை (5 புள்ளி)
இ) "ஆடிக் குடத்தடையும்.........." என்பதில் குறிப்பிடப்படும் ஐந்து செயல்களையும் தருக. (5 புள்ளி)

4. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு
   அ) நாவலர் வாதிடுவதற்காக சபைக்கு எழுந்த விதம். (8 புள்ளி)
   ஆ) நாவலரின் திறமையும் நேர்மையும் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக. (7 புள்ளி)

அல்லது

கம்பியூட்டர் என்ற பாடத்தில்,
அ) கம்பியூட்டர் அட்ச இருதயக் கலையில் கைதேர்ந்தது எனபதற்கான காரணம் (5 புள்ளி)
ஆ) காளமேகப் புலவர் தான்பட்டபாட்டை கூறும் விதம் (5 புள்ளி)
இ) கம்பியூட்டர் என்ற தலைப்பின் பொருத்தப்பாடு என்பவற்றை விளக்குக. (5 புள்ளி)

♦ **பின்வரும் 5, 6 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து விடை எழுதுக.**

5. "பாரதியார் சுயசரிதை" என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு
   அ) விரும்பியவற்றை அடையாதவர்களின் இயல்புகள்
   ஆ) கவிஞரின் உவமை அணிப்பயன்பாடு என்பன பற்றி விளக்குக.

6. "முதுமொழி வெண்பா" என்னும் நீதிநூலில்
   அ) மனங்கொண்டது மாளிகை
   ஆ) மனநிறைவை எடுத்துக்காட்டும் செயல்கள் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.